# இலங்கையின் சமகால
# சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்
# Contemporary Socioeconomic Issues in Sri Lanka.

அமரர் இலக்கிய கலாநிதி நாகலிங்கம் பாலகிருஸ்ணன்
அவர்களின் சேவை விதப்பு வெளியீடு

**A Festschrift in Honour of Late Dr. N.Balakirishnan**

*பதிப்பாசிரியர்:*

**சிதம்பரநாதன் உதயகுமார்**

*பிரதம பதிப்பு ஆலோசகர்:*

**பேராசிரியர் பசுபதி சிவநாதன்**

**வெளியீடு:**

**பொருளியல் துறை, கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**2014**

தலைப்பு : "இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்"
அமரர் இலக்கிய கலாநிதி நாகலிங்கம் பாலகிருஸ்ணன்
சேவை விதப்பு வெளியீடு
பதிப்புரிமை : @2014 திரு. எஸ். எஸ். உதயகுமார்
பதிப்பாசிரியர் : சிதம்பரநாதன் உதயகுமார்
வெளியீடு : பொருளியல் துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
அச்சுப் பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்,
39/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
பக்கங்கள் : C + 250
விலை : 1000/=

**Title** : "Contemporary Socioeconomic Issues in Sri Lanka"
A Festschrift in Honour of Late Dr. N.Balakirishnan
**Copy right** : @ 2014 by Mr. S. S. Uthayakumar
**Edited by** : Sithamparanathan Uthayakumar
**Published by** : Department of Economics, Faculty of Arts,
University of Jaffna,
Jaffna,
Sri Lanka.
**Printed by** : Guru Printers ,
39/2, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
**ISBN** : **978 955 0585 05 -2**
**Pages** : C + 250
**Price** : 1000/=

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் உள்ளடக்கத்திற்கும் கருத்துக்களுக்கும்
கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர்.

# நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் நல்லாட்சியின் வகிபாகம்

எஸ். எஸ். உதயகுமார்
*தலைவர் மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர்,*
*பொருளியல் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

இக்கட்டுரையானது அறிமுகம், ஆளுகை என்பதன் விளக்கம், ஆளுகையின் முக்கியத்துவம், நல்லாட்சி என்பதன் விளக்கம், நல்லாட்சியின் முக்கியத்துவம், நல்லாட்சியை நிர்ணயிப்பதல் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், நல்லாட்சியின் வகைகள் நல்லாட்சியின் தேவைப்பாடு நல்லாட்சியின் பிரதான மூலங்கள் அல்லது முகங்கள், நல்லாட்சியை அளவிடும் முறைகள், நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகள், பொருளாதார அபிவிருத்தியில் நல்லாட்சியின் முக்கியத்துவம் என்ற வகையில் நோக்கப்பட்டு இறுதியாக முடிவுரை என்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

## அறிமுகம்

அரசாட்சி அல்லது ஆளுகை (Governance) என்றால் என்ன? ஏன் அது கருத்திற் கொள்ள வேண்டிய விடயமாக உள்ளது? எவ்வாறு சிறந்த முறையில் அரசாட்சி செய்யலாம் அல்லது ஆளலாம் என்று சிந்திப்பது ஒரு புதிய விடயமல்ல. புராதன கிரேக்கத்தில் செழிப்புற்று வரும் உயிர்களை வழிநடாத்துவதற்கான மக்களின் ஆற்றலை எவ்வாறு சிறந்த முறையில் வசதியாக்கலாம் என்பது அரிஸ்ரோட்டிலின் சிந்தனையில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

தற்போது ஆளுகை பற்றிக் கணிசமான இலக்கியங்கள் உள்ளன. ஆளுகை என்பது ஒரு செயற்பாடே தவிர அது ஒரே நிலையல்ல. உண்மையில் யாவரும் சில முக்கிய அம்சங்களில் இணங்கிக் கொள்கின்றோம். என்பதாகும்.

முதலாவதாக, ஆளுகை தொடர்பான செயற்பாட்டைக் குறிக்கின்றது எவ்வாறு விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன? அதாவது, வெறுமனே எது செய்யப்படுகின்றது என்பதல்ல.

இரண்டாவதாக, ஆளுகை பற்றிய கலந்துரையாடலுக்கு அரசினை மட்டும் நோக்குவது போதாது. அரசுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளின் தன்மையையும் அது கூறுகின்றது.

மூன்றாவதாக, பொதுமக்களின் ஆட்சிப்பரப்பினை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளின் தன்மையை ஆளுகை குறிப்பிடுகின்றது. அரச பொருளாதார மற்றும் சமூக நடிகர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தொடர்பு கொள்கின்ற இடமெனலாம்.

நான்காவதாக, பொருளதார மற்றும் சமூக இலக்குகள் இடையேயும் தனிப்பட்டவர்கள் மற்றும் இனரீதியான குழுக்களிடையே சமநிலையைப் பேணுவதுடன் ஆளுகை என்பது அக்கறை கொண்டுள்ளது.

மூலவளங்களின் வினைத்திறனான பயன்பாட்டினை ஊக்குவிப்பதும் அந்த மூலவளங்களை உத்தமமான முறையில் பயன்படுத்துவதற்காக வகை அல்லது பொறுப்புக் கூறலையும் (Accountability) சமமாகப் பேணுவதற்கேற்ற வகையில் ஆளுகை தொடர்பான வரையறை (Governance framework) உள்ளது.

இந்த வகையில் தனிநபர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சமூகத்தின் நலன்களை முடிந்த வரை அருகருகே கொண்டு வருவது ஆளுகையின் நோக்கமாக உள்ளது.

## அரசாட்சி அல்லது ஆளுகை

அரசாட்சி அல்லது ஆளுகை என்பது ஒரு நாட்டினை அல்லது நிறுவனத்தை ஆட்சி செய்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். இதனை "நல்வாழ்க்கையில் முழுமையான பயனை அடையக் கூடிய வகையில் நெறிப்படுத்தி நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு வரன் முறை" என வரையறை செய்யலாம். இவ்வகையில் அரசாட்சி அல்லது ஆளுகை என்பது உலகளாவிய ரீதியில் பரந்துபட்ட ரீதியில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் படிப்படியாக நாடுகளின் அபிவிருத்தியில் முக்கியம் பெற்று இன்று தனிமனிதனின் அபிவிருத்தி வரை அவசியமானதும் தவிர்க்க முடியாததும் முக்கியமானதுமான ஒரு காரணியாகக் காணப்படுகின்ற அளவுக்கு முக்கியம் பெறுகின்றது.

ஆளுகை (Governance) என்ற பதமானது கிரேக்க (Greek) வினைச் சொல்லான (verb) "Kybenan" மற்றும் கிரேக்க பெயர்ச் சொல்லான (noun) "Kybenaetas" என்பவற்றிலிருந்து பெறப்பட்ட ஒரு பதமாகும். இதன் கருத்து யாதெனில் செலுத்துவது அல்லது இயக்குவது என்பதாகும். அதாவது ஒரு அமைப்பினைச் செயற்படுத்திச் செல்லும் ஒரு கட்டுக்கோப்பான அம்சம் என்பதாக உள்ளது. மேலும் இந்த ஆளுகை என்பது சட்டரீதியான தொடர்ச்சியான இயற்கை ஆற்றல், கட்டுப்பாடு, மற்றும் மத்தியஸ்தம் போன்றவற்றில் அதிக முக்கியத்துவத்தினைக் கொண்டிருப்பதுடன் அரச செயற்பாட்டிற்கு மட்டுமன்றி அரசசார்பற்ற செயற்பாடுகளுடனும் தொடர்புபட்ட வகையில் சமூக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு கருவியாகவும் விளங்குகின்றது.

ஆளுகை அல்லது அரசாட்சி என்பது செயல் அல்லது நடத்தையை நடைமுறைப்படுத்தக்கூடிய அல்லது நெறிப்படுத்தக் கூடிய வரன் முறையினை குறிக்கும் ஒரு பதமாகும். இங்கு ஆளுகை அல்லது அரசாட்சி என்பது அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றினைக் குறித்து நிற்கும் ஒரு பதமல்ல. இங்கு அரிஸ்ரோட்டில் என்பவரின் கருத்துப்படி இயற்கையான உணர்விலும் நம்பிக்கையினாலும் கூடி வாழ்ந்த மக்கள், குடும்பமாகிய போதும், பின்னர் குடும்பம் சமுதாயமாகி அதன் வழி அரசாகியது என்றும் சுட்டிக்காட்டியதுடன் இவ்வழியில் மனிதனுடைய நடத்தையினாலும் தேவையினாலும் எழுந்ததே அரசு என்றும் இத்தகைய நல்நெறிகளை மனித வாழ்வில் புகுத்த உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே அரசாங்கம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வகையில் அரசு (State), அரசாங்கம் (Government) மற்றும் அரசாட்சி (Governance) என்பன வேறுபட்ட எண்ணக்கருக்களாகும்.

Resenau இன் கருத்துப்படியும், அரசாங்கம் என்பது வேறு அரசாட்சி அல்லது ஆளுகை என்பது வேறுபட்டதாகவே அமைகின்றது. ஆளுகை என்பதனுடைய எண்ணக்கரு மற்றும் கட்டுப்பாடு என்பன அரசியல் செயற்பாடுகளை ஒரு கட்டாய நிலைக்கு கொண்டுவரக்கூடிய வகையில் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைவதுடன் இதனூடாக சமுதாய அமைப்பினை வழிப்படுத்துகின்ற அல்லது நெறிப்படுத்துகின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பாக அரசாங்கம் அமைகின்றது. நல்லாட்சி என்பது தொடர்பாக உலக வங்கி அறிக்கையின் படி நல்லாட்சி என்பதன் பொருள் யாதெனில் ஒரு தேசத்தின் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்காக அரசியல் அதிகாரத்தினைப் பயன்படுத்துவதாகும்.

நல்லாட்சி என்றால் என்ன? என்ற வினாவினை ஆழமாக நோக்கும் போது நல்லாட்சி (Good Governance) என்ற சொல்லின் மூலம் எவ்வாறான கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது என்பதனை விட மேலோட்டமாக இது அரசியல் தேவையினை வெளிப்படுத்தும் ஒரு விடயமாகும் என்று குறிப்பிடலாம்.

1950கள் மற்றும் 1960களில் அபிவிருத்திக் கொள்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் யாதெனில் கீழ்க்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அபிவிருத்தியாக இருந்தது. பின்னர் அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட விடயம் வெற்றியளிக்காத காரணத்தால் "மக்களின் அடிப்படைத் தேவைகள்" சம்பந்தமாக 1970களின் தசாப்தத்தில் கவனமெடுக்கப்பட்டது. அதற்கேற்ற வகையில் ஏழ்மையை அகற்றுதல், கல்வி சுகாதாரம், போசாக்கு போன்ற விடயங்களை மையப்படுத்தி பல்வேறு செயற்திட்டங்களை உருவாக்கியது.

இருப்பினும் உலக பொருளாதார செயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் செயற்திறன் குன்றிய நிர்வாகக்கட்டமைப்பின் காரணமாகவும் 1980 காலப்பகுதியின் ஆரம்பத்திலேயே அபிவிருத்தி நடவடிக்கைகள் மாற்றமடைய ஆரம்பித்தது. அதற்கமைய உலக வங்கி, போட்டித்தன்மை, தனியார் மயப்படுத்தல், மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி தனது பார்வையை திருப்பியது. உலக வங்கிக்கு அதிகளவில் பணத்தினை வழங்கும் ஐக்கிய அமெரிக்கா நல்லாட்சி என்ற எண்ணக்கருவினை முன்வைத்தது. உலகவங்கி இதனை 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்த எண்ணக்கருவினை அதிகளவில் பயன்படுத்தியது. ஆபிரிக்காவில் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினையைப் பற்றி உலக வங்கி அறிக்கை தெளிவுபடுத்தும் போது மேற்கூறிய விடயத்தினை விபரித்திருந்தது.

"ஆபிரிக்காவில் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் எழுவதற்கான காரணம் அங்கு காணப்படும் ஆட்சி தொடர்பான பிரச்சினையே ஆகும் என்னும் பொருளிலேயே அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. (Leftwich 1993, 610-11, 192, World bank Report). அது நல்லாட்சி தொடர்பான விளக்கமாகும்.

## அரசாட்சி அல்லது ஆளுகையின் முக்கியத்துவம்

அரசாட்சி அல்லது ஆளுகையின் முக்கியத்துவம் என்ற வகையில் வறுமையை ஒழிப்பதிலும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதிலும் மிக முக்கியமான தனியான காரணி, சிறந்த ஆளுகை அல்லது நல்லாட்சி என முன்னாள் ஐக்கிய நாடுகள் செயலாயளர் நாயகமான கோபி அனான் 1998 இல் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் The Economist என்ற சஞ்சிகையில் 1999 இல் "வறிய மக்களைக் கொல்கின்ற கொடுமைகள் யாவற்றிலும் கூடாத அல்லது கெட்ட அரசாட்சி (Bad Governance) போன்று மிகக் கொடிய கொல்லும் தன்மை வேறொன்றுமில்லை" என்ற வகையில் Good governance என்பதன் அவசியம் பற்றி எடுத்துக் கூறியுள்ளது.

மேலும், "சிறந்த ஆளுகை மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் (Capacity Buildup) என்ற விடயம் தான் ஆபிரிக்க பிரச்சினைகள் யாவற்றினதும் மையமாக இருக்கின்றதென நாம் நம்புகின்றோம்." என 2005 இல் ஆபிரிக்காவின் ஆணைக்குழு கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2005 இல் வெளியிட்ட புத்தாயிரமாம் ஆண்டுத் திட்டத்தில், "எந்த ஒரு நாடும் அது எவ்வளவுதான் வறுமையாக இருந்த போதிலும் அதனது பிரச்சினை யாதெனில் அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்து சட்டத்தின் சமமான பாதுகாப்பை மறுத்து அவர்களை ஊழல், தவறான முகாமைத்துவம், அல்லது பொருளாதார ரீதியான பகுத்தறிவற்ற நிலைக்கு பலியாவதற்கு விட்டு விடுதல் ஆகியவற்றுக்கு எவ்வித மன்னிப்பும் இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளது.

## அரசாட்சி அல்லது ஆளுகை (governance) என்பதை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள்:

ஆளுகை என்பது பல தரப்பட்ட அம்சங்களான, அதிகாரம், அரசியல் பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகள் பிரிக்கப்பட முடியாதவாறு சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் தொடர்பான செற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகின்ற வகையில் முக்கிய இடம் பெறுகின்றது.

Figure-1:

| Determinants | → | Governance Realm | → | Development Outcomes |
|---|---|---|---|---|
| Historical context | | Civil Society | | Political freedom & Rights |
| Previous Regime | | Political society | | Human security & Walfare |
| Socio- Cultural context | | Government | | Economic Growth |
| Economic system | | Bureauracy | | Human capital(Health & Education) |
| International | | Economic society | | |
| | | Judiciary | | |

அரசாட்சியை அல்லது ஆளுகையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக:

- வரலாற்று ரீதியான விடயங்கள்
- முன்னைய ஆட்சி
- சமூக கலாச்சார விடயங்கள்
- பொருளாதார முறைமைகள்
- சர்வதேச சூழல் என்பவை காணப்படுகின்றன.

எனவே அரசாட்சி அல்லது ஆளுகை (Governance) என்பது தனியே அரசாங்கத்துடன் மட்டுமன்றி வங்கி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கம்பனிகள் போன்ற பல அமைப்புகளிலும் காணப்படுகின்ற செயல் அல்லது நடத்தையை நடைமுறைப்படுத்தக் கூடிய அல்லது நெறிப்படுத்தக் கூடிய ஒரு வரன் முறையினை குறிக்கும் ஒரு பதமாகும். இது அதன் செயல் அல்லது நடத்தையின் விளைவாக நல்லாட்சி (Good Governance) ஆகவோ அல்லது கூடாத / நல்லதல்லாத ஆட்சி (Bad Governance) ஆகவோ காணப்படலாம். இவ்வகையில் நாம் அடுத்து நல்லாட்சி என்றால் என்ன என்பது பற்றியும் நல்லாட்சிக்குரிய பணபுகள் பற்றியும் ஒரு நாட்டில் நல்லாட்சியை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியும் சற்று விரிவாக நோக்குவோம்.

நல்லாட்சி என்ற பதம் குறித்து மிகவும் தெளிவானதும் சரியானதுமான ஒரு வரைவிலக்கணத்தினைக் கூறமுடியாது. இருப்பினும் இது தொடர்பான தெளிவினைத் தரத்தக்க வகையில் பல விளக்கங்கள் உள்ளன. அந்த வகையில் ஏதாவது ஒரு சமூகத்தில் வாழ்கின்ற ஒட்டு மொத்த மக்கள் கூட்டத்தினரின் நம்பிக்கைகள், விருப்புக்கள், நட்புறவுகள், ஒத்துழைப்புக்கள் போன்ற பல இன்னோரன்ன விடயங்களை உள்வாங்கி மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு செயற்பாடும் நல்லாட்சி அல்லது நல்ல ஆளுகைக்கு உட்படுவதாகப் பொருள் கொள்ள முடியும். இது பொது நிறுவனங்கள், மட்டுமன்றி இதர அமைப்புகளையும் முகாமை செய்தல் மனிதர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பொதுச் சொத்துக்கள் மற்றம் அருமையானதும் மாற்றுப்பயன்பாட்டினையும் கொண்டதான வளங்களை எதிர்கால சந்ததிக்கும் கிடைக்கக் கூடிய வகையில் பயன்படுத்துதல் ஊடாக பொருளாதார அபிவிருத்தி மட்டுமன்றி நிலைத்திருக்க கூடிய அபிவிருத்தியையும் அடையக் கூடிய வகையில் வளங்களைப் பயன்படுத்தல் முகாமை செய்தல் பாதுகாத்தல் மதிப்பளித்தல் போன்ற பல எண்ணக்கருக்களுடனும் தொடர்புடைய ஒன்றாக இந்த நல்லாட்சி என்பது தொடர்பு கொண்டுள்ளது எனலாம்.

இவ்வகையில் நல்லாட்சித் தத்துவம் (Good Governance Principle) என்பது அண்மைக்காலங்களில் அபிவிருத்தி சார்ந்த இலக்கியங்களில் பெருமளவில் பேசப்படுகின்ற ஒரு விடயமாக உள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் தமது நிதி உதவிகள், கடன்கள் என்பவற்றை வழங்குவதற்கு நல்லாட்சி நோக்கிய மாற்றங்களை வலியுறுத்துகின்றன. இங்கு நல்லாட்சி என்று குறிப்பிடுகின்ற போது, கூடாத அல்லது கெட்ட அல்லது நல்லதல்லாத ஆட்சி (Bad Governance) பற்றியும் சிந்தித்தாக வேண்டும். இத்தகைய Bad Governance என்பது அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உகந்தது அல்ல என்பது இங்கு உள்ளுறைப் பொருளாக புரிந்து கொள்ள வேண்டியதாகும். நல்லாட்சி என்பது புதியதொரு விடயமல்ல மனித நாகரிகத்தின்

தொடக்கத்தோடு தொடர்புபட்ட ஒரு விடயமாகும். இதன் அர்த்தம் என்னவெனில் முடிவுகள் எடுக்கப்படுகின்ற முறைமை அல்லது அதற்கான படிமுறை என்பது அவ்வாறு எடுக்கப்படுகின்ற முடிவுகள் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றன என்பதன் அடிப்படையில் காணப்படுகின்றன. இது ஸ்திரமானதாக இருக்கின்ற போது தான் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி என்பது சாத்தியமானதாக அமையும். இவ்வகையில் நாடொன்றின் அபிவிருத்திக்கு அந்த நாட்டில் சகல செயற்பாடுகளிலும் நல்லாட்சி என்பது காணப்பட வேண்டியதன் அவசியத்தினை தெளிவாக உணர்த்துகின்றது.

இது ஸ்திரமானதாக இருக்கின்ற போது தான் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி என்பது சாத்தியமானதாக அமையும். இவ்வகையில் நாடொன்றின் அபிவிருத்திக்கு அந்த நாட்டில் சகல செயற்பாடுகளிலும் நல்லாட்சி என்பது காணப்பட வேண்டியதன் அவசியத்தினை தெளிவாக உணர்த்துகின்றது.

## நல்லாட்சிக்கான குணப்பண்புகள்

இவ்வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குணப்பண்புகள் எல்லாம் அல்லது அவற்றில் சில குணப்பண்புகள் ஏற்படுவதனை நல்லாட்சி எனலாம்.

- ❖ செயற்திறன் வாய்ந்த ஒரு அரச சேவை
- ❖ சட்டத்துடன் ஒன்றிணைந்து காணப்படும் விடயங்களை நிறைவேற்றுவதற்காக சுயாதீனமான நீதிமன்றமும் சட்டரீதியான நிறுவனம் சார்ந்த திட்டமிடல்களும் காணப்படுதல்
- ❖ பொறுப்புடன் கூடிய முறையில் பொதுமக்களின் பணத்தினை நிர்வகிக்கும் தன்மை காணப்படுதல்
- ❖ ஒரு சுயாதீனமான அரச கணக்காய்வு நிறுவனம் (அது பாராளுமன்றத்துக்கு மட்டும் பொறுப்புக் கூற வேண்டும்)
- ❖ அரசாங்கத்துடன் இணைந்து காணப்படும் சகல பிரிவுகளும் சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.
- ❖ ஒரு பன்மை வாத நிறுவனத் திட்டமிடல் காணப்படல் வேண்டும்.
- ❖ சுதந்திரமான ஊடகத்துறை காணப்படுதல் என்பற்றைக் குறிப்பிடலாம். (Leftwich 1993, 610-11, 192 , World bank Report)

## நல்லாட்சியின் வகைகள்

நல்லாட்சி என்பது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு செயற்பாடுகளில் சிந்திக்கும் போது அந்தந்தச் செயற்பாடுகளுக்கேற்ப அந்தந்தச் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்ற தன்மைக்கேற்ப நாம் பல வகைகளில் பாகுபடுத்த முடியும் இந்த வகையில் உதாரணமாக

- ❖ இணைந்த நல்லாட்சி (Corporate Good Governance)
- ❖ சர்வதேச நல்லாட்சி (International Good Governance)
- ❖ தேசிய நல்லாட்சி (National Good Governance)
- ❖ உள்ளக நல்லாட்சி (Local Good Governance) என பாகுபடுத்த முடியும்.

நல்லாட்சியை நிலை நிறுத்துவதில் பலதரப்பட்டவர்களும் பங்களிப்பு நல்க வேண்டியுள்ளது. இந்த வகையில் நிலப்பிரபுக்கள், விவசாய அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்கள், சமயத் தலைவர்கள், நிதி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், இராணுவத்தினர் உட்பட்ட பாதுகாப்பு பிரிவினர் என்ற பல தரப்பட்ட பிரிவினரும் பங்களிப்பு நல்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டிற்குள் அதாவது உள்ளூரில் நல்லாட்சியை நிலை நிறுத்துவதில் இவர்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகின்றது அல்லது தேவைப்படுகின்றது எனலாம். அதேநேரம் தேசிய மட்டத்தில் மேற்கூறப்பட்டவர்களுடன் ஊடகங்கள், அமுக்கக் குழுக்கள், சர்வதேச நிதிக் கொடை நிறுவனங்கள், பல்தேசியக் கம்பனிகள், என்பவை முடிவுகள் தீர்மானங்கள் எடுப்பதில் அல்லது மேற்கொள்வதில் அல்லது அவற்றை நடைமுறைப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் குழுமங்களாகக் காணப்படுகின்றன. இவற்றுடன் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சட்ட விரோத ஆயுதக் கும்பல்கள் கூட நாட்டிற்குள்ளேயும் சரி தேசிய ரீதியிலும் சரி நல்லாட்சியை ஏற்படுத்துவதில் அல்லது உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக உள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## நல்லாட்சியின் தேவைப்பாடு

உலக வங்கியின் கண்ணோட்டமானது "ஒரு தேசியத்தின் உடைய சமூக பொருளாதார வளங்களை முகாமை செய்து அபிவிருத்தி அடைவதற்காக அரசியல் அதிகாரங்களைப் பிரயோகித்தல்" என்பதாக அமைவதுடன் செயற்திறன் மிக்க அரச சேவை சுயாதீன நீதியமைப்பு ஒப்பந்தங்களை செயல்வலுப்படுத்துவதற்கான சட்டம் சார்ந்த வரையறை திட்டம், அரச நிதியங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறக்கூடிய நிர்வாகம், சகல மட்டங்களிலும் சட்டங்களுக்கு மதிப்பளித்தல், பல்லினம் சார்ந்த நிறுவனக்கட்டமைப்புக்கள், என்பனவும் உள்ளடங்கும் இன்று மனித உரிமைகள் என்ற எண்ணக்கருவின் ஊடாகவும் இந்த நல்லாட்சித் தத்துவம் என்ற விடயம் பரிசீலிக்கப்படுகின்றது. சிறப்பாக ஒவ்வொரு பிரஜையும் சிவில், கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளுடன் சமூக உரிமைகளையும் பெறும் போதே நல்லாட்சித்தத்துவம் என்ற எண்ணக்கரு செயலுருப் பெறுகின்றதெனலாம். இவ்வகையில் நல்லாட்சி என்பது மனித அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதை அவதானிக்க முடியும். உதாரணமாக மனித அபிவிருத்திக் குறிகாட்டிகளை நாடுகளுக்கிடையில் ஒப்பிடுவதன் மூலம் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

மனித உரிமைகள் (Human Rights) மேம்பாடு தொடர்பான மனித உரிமை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இந்த ஆணைக்குழு வெளியிட்ட திருத்தச் சட்டம் (Amedment) 2000/64 இல் நல்லாட்சித் தத்துவத்தினுடைய முக்கிய காரணிகளாக வெளிப்படைத்தன்மை (Transperancy), பொறுப்புக் கூறும் தன்மை (Accountability), பொறுப்புணர்வு (Responsibility), பங்கேற்பு (Participation) மக்கள் தேவைகள் தொடர்பில் பதிலளிக்கும் தன்மை (Responsiveness) என்பவற்றை முதன்மைப்படுத்துகின்றது.

## நல்லாட்சியின் பிரதான மூலங்கள் அல்லது முகங்கள்

நல்லாட்சி என்பது பின்வரும் பிரதான முகங்களை அல்லது மூலக்கூறுகளை (elements) கொண்டுள்ளது அவை பின்வருமாறு:

- பங்களிப்பு (Participation)
- ஒளிவுமறைவின்மை அல்லது வெளிப்படைத் தன்மை (Transperancy)
- பயனுறுதி அல்லது வினைத்திறன் (Efficiency)
- சிக்கனம் (Economy)
- செயலூக்கம் (Effectively)
- பொறுப்புடமை அல்லது வகை கூறல் (Accountability)
- சமத்துவம் (Equity)
- நேர்மை (equitable & inclusive)
- தொடர்பாடல் (Communication)
- சட்டத்தைப் பின்பற்றுதல் (Follows the rule of law)
- பகுதிகளின் இணைப்பு (Consensus Oriented)

மேற்கூறப்பட்ட குணாம்சங்களோடு ஒரு நாட்டில் ஆட்சி முறை காணப்பட்டால் அத்தகைய ஆட்சி முறை நல்லாட்சி எனக் கணிக்கப்படும். இதன் மூலம் முறைகேடுகள் குறைக்கப்படுவதுடன் வறிய மக்களினது குரலும் கேட்கப்படுவதுடன், சிறுபான்மையினரின் கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பனவும் கவனத்தில் கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை காணப்படும். எனவே மேற்படி குணாம்சங்கள் அல்லது தகுதி விதிகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

### பங்கேற்பு - (Participation)

பங்கேற்பு நடவடிக்கை மூலமாக மிக வெற்றிகரமான திட்டங்களும் பயனுறுதி மிக்க தீர்மானங்களும் எடுக்கப்படும் இத்தகைய பங்குபற்றல் என்பது சிவில் சமூகத்தில் இடம் பெறும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பொருளாதார நிறுவனங்களின் பொருளாதார நடத்தைகள், அரசியல்கட்சி செயற்பாடுகள், எனப் பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களிலும் பயன்படும் போது அங்கு மக்களின் பங்கேற்புடனான (People Participation) ஒரு நல்லாட்சி (Good Governance) ஏற்பட வழிகோலும் எனலாம்.

### வெளிப்படைத்தன்மை (Transpeerancy)

சமூகத்தில் இடம்பெறுகின்ற சகல செயற்பாடுகளிலும் ஒளிவுமறைவற்ற தன்மை எதிர்பார்க்கப்படுகின்றது. மக்கள் எல்லா விடயங்களையும் அறிந்து கொள்வதன் தேவையின் பேரில் தகவல்களையும் தரவுகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளும் இதில் அடங்கும். இதனூடாக நாட்டில் நல்லாட்சி நிலவ வழியேற்படும்.

### பயனுறுதி (Efficiency)

நாட்டில் உற்பத்தி மற்றும் இதர நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் ஆக்க மூலங்களை உரிய விதத்தில் கையாண்டு இலக்கிடப்பட்ட காலவரையறையினுள் பயனுறுதி வாய்ந்த விதத்தில்

யாதேனுமொரு செயற்பாட்டைப் பூர்த்தி செய்வது இதன் மூலம் கருதப்படுகின்றது. அரச சொத்துக்கள், நிதி, உழைப்பு, ஆகியவற்றை பயனுறுதி வாய்ந்த விதத்தில் கையாள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் ஊடாக நல்லாட்சிக்கான சூழ்நிலை உருவாக வாய்ப்புண்டு.

## சிக்கனம் - (Economy)

பொதுச் சொத்துக்களை கையாளும் போது அவற்றை உரிய முறையில், எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை எய்துவதற்காக சிக்கனத்துடன் கையாள்வது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது வளங்களைச் சிக்கனத்துடன் கையாள்வது ஒட்டு மொத்த மக்களுக்கும் பயனுறுதி மிக்கதாகும். இதனூடாக நல்லாட்சி உருவாக வாய்ப்புண்டு.

## செயலூக்கம் - (Effectivity)

யாதேனுமொரு செயற்பாட்டின் போது செயலூக்கம் என்பது மிக முக்கியமான ஒரு அம்சமாக அமைவதுடன் இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு எட்டப்பட வேண்டும். பயனுறுதி வாய்ந்த பணிகள் குறித்து தீர ஆராய்ந்த பின்னர், அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் எய்தப் பெறக்கூடிய சந்தர்ப்பத்திலேயே வளங்களைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்த முற்படும் போது நாட்டில் நல்லாட்சி நிலவ வழியேற்படும்.

## பொறுப்புக் கூறல் அல்லது வகை கூறல் - (Accountability)

பொறுப்பு கூறல் என்பது தமது செயல்கள் தொடர்பில் வகை சொல்ல வேண்டும் என்பதாகும். அவ்வாறே எந்த ஒரு செயலாயினும் சரி எத்தகைய செயலாயினும் சரி பொறுப்பு வகித்தலும் மேற்கொள்ளப்படும் அலுவல்களைத் தாமே பொறுப்பேற்பதும் இதன் மூலம் பொருள் கொள்ளப்படும். இத்தகைய வகைகூறல் உரிய முறையில் பின்பற்றப்படுவதன் மூலம் நல்லாட்சி உருவாக வழியேற்படும்.

## சமத்துவம் - (Equity)

சமூகத்தில் வாழும் சகலரையும் சரிசமமாகக் கருதி, எந்த ஒரு பாரபட்சமும் இன்றி ஒரு செயற்பாட்டையும் எப்போதும் சரிசமமாக செயற்படுத்துவதாகும் அரசாங்கங்கள் அல்லது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயற்பாட்டிலும் அதன் நன்மைகள் பெறுவோருக்கு அத்தகைய நன்மைகள் சரிசமமாகக்கிட்ட வழியேற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு சமத்துவம் பேணப்படும் சூழ்நிலையில் நல்லாட்சி ஏற்பட வழிகோலும்.

## தொடர்பாடல் - (Communication)

எந்தவொரு செயற்பாட்டிலும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கிடையாகவும் நிலைக்குத்தாகவும் தகவல்கள் பரந்து செல்ல வேண்டும். அதன் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடு குறித்த சிறந்த காத்திரமான தொடர்பாடலொன்று ஒட்டு மொத்த சமூகத்திற்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் நாட்டில் நல்லாட்சியை உருவாக்க முடியும்.

இவ்வாறாக மேலே கூறப்பட்ட பல மூலக்கூறுகள் ஒரு நாட்டில் நல்லாட்சியை ஊருவாக்குவதற்கான முக்கிய விடயங்கள் எனலாம். இவ்வகையில் இவ்வாறான

சூழ்நிலைகளின் போது பொருளாதாரத்தில் நல்லாட்சி தொடர்பான நிலையினை அடுத்து நோக்குவோம்.

## பொருளாதாரமும் நல்லாட்சியும்

அரசாட்சி என்பது ஒரு நாடு சம்பந்தமான எல்லா நிலைகளிலும் அரசியல் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவ நிர்வாக அதிகாரம் என்பவற்றை செயல்படுத்தலாகும். சிக்கலான பொறிமுறைகள் நடைமுறை உறவுகள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக மக்களும் குழுக்களும் தங்களுடைய விருப்பங்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவித்தல் மற்றும் கடமைகள் அத்துடன் தமக்குள் இருக்கும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நடுநிலையான கொள்கையாகும். மேலும் நாம் எமது பிரச்சனைகளை ஒன்று சேர்ந்து தீர்ப்பதும் எங்களுடைய சமூகத்தேவைகளை நிவர்த்தி செய்யும் பொறிமுறை ஆட்சியாகும். அரசாங்கம் என்பது நாம் உபயோகிக்கும் கருவியாகும்.

தேசிய அரசாங்கங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் சபைகள் ஸ்தாபனங்கள் கழகங்கள் எல்லா விதமான நிறுவனங்கள் என்பவற்றுக்குள் அரசாட்சி அல்லது ஆளுகை என்ற பிரயோகம் அடங்கும்.

நல்லாட்சி என்பது ஒட்டுமொத்த பிரச்சனைகளுக்கும் ஏற்றவாறு வளங்களை ஒதுக்கீடு செய்தலும் முகாமைத்துவப்படுத்தலுமாகும். அதாவது பிரதிநிதித்துவம் பங்குபற்றல் ஊடுகாண் நிலை பொறுப்பேற்றல் சட்ட ஆட்சி செயல்திறன் மற்றும் சமத்துவம் என்பவற்றை குணாதிசயங்களாக கொண்டமைந்துள்ளது. நல்லாட்சியானது கீழ் வரும் நான்கு முக்கியமான அடிப்படைக் கொள்கைகளை கொண்டமைந்துள்ளது.

1. பிரதிநிதித்துவம் :- தீர்மானங்களை எடுப்பவர்களால் அங்கத்தவர்களின் கருத்துக்களை நேர்மையாக பரிசீலித்தல்.
2. ஊடுகாண் நிலை :- அங்கத்தவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிந்திருக்க வேண்டும். *(உ-ம் தீர்மானம்)*
3. பொறுப்பேற்றல் :- மக்கள் தமது நடவடிக்கைகளுக்கு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். *(உ-ம் தீர்மானம்)*
4. பங்குபற்றுதல் :- சகல அங்கத்தவர்களும் தீர்மானங்களில் பங்கேற்க முடியும். இது நேரடியாகவோ அல்லதுபிரதிநிதித்துவ மூலமாகவோ இருக்க முடியும். *(உ-ம் அவர்களுடைய கருத்துக்களை கவனத்தில் கொள்ள வைக்கலாம்)*

மேலும் நாட்டின் வளங்களை அரசசார்பான, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாகவும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் சகல பகுதிகளையும் உள்ளடக்கிய பல முகங்களை கொண்ட கொள்கைகளை உடையதே நல்லாட்சி எனப்படும். நல்லாட்சி தன்மை மக்கள் வாழ்கையில் சந்தோஷமடையும் அளவுக்கு அதிகாரம் செய்வது எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பதை மதிப்பிடுவதே நல்லாட்சியின் தன்மையாகும். மக்களின் சுகவாழ்வில் நாட்டினால் ஏற்படுத்தப்பட்ட எஞ்சியுள்ள தாக்கத்தை மதிப்பிடுவற்கு நிறுவனங்களின் சூழல் ஆர்வம் மற்றும் கொள்கை என்பவற்றின் மேம்பாட்டில் விழிப்புணர்வு அதிகரித்து வருகின்றது. நாடுகளுக்கிடையான ஆட்சியின் முக்கியமான தன்மைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இவ்வாறான சூழலை ஏற்படுத்தும் சகல கொள்கைகளையும் ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

ஆட்சி அளவினை பற்றிய முக்கிய கொள்கைகளை அறிவதற்கு பின்வரும் விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- மக்களின் கருத்தும் வெளிப்பாடும்.
- அரசாங்க ஒழுங்கமைப்பு.
- சமூக அபிவிருத்தியும் பொருளாதார முகாமைத்துவமும்.

இதன் பிரகாரம் ஒரு அரசாங்கத்தின் தகுதியை அதாவது நல்லாட்சித் தன்மையை வெளிப்படுத்தும் பின்வரும் நான்கு விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

- ஒழிவுமறைவற்ற அரசியல் விவகாரங்களையும் மக்களின் கருத்துக்களையும் உறுதிப்படுத்தல்.
- செயற்திறன்மிக்கதும் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதனையும் உண்டு பண்ணுதல்.
- மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்கைத்திறனை உயர்த்துதல்.
- நிரந்தரமான பொருளாதார வளர்ச்சியை உண்டுபண்ணுவதற்கான சாதகமான சூழலை உருவாக்குதல்.

இவையாவும் அரசாங்கங்கள் முகம் கொடுக்கவேண்டிய இலக்குகளென 1992 இல் உலக வங்கியினால் வெளியிடப்பட்ட ஆட்சியும் அபிவிருத்தியும் என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

*"Jeff Huther and Anwar Shah"* என்பவர்களினால் எழுதப்பட்ட *'Applying Simple Measure of Good Governance to the Debate on Fiscal Decentralization'* என்ற ஆய்வுக் கட்டுரையில் நல்லாட்சியை அளவிடுவதற்கான சுட்டிகளாக மேற்குறிப்பிடப்பட்டவற்றை எடுத்து 80 நாடுகளுடன் ஒப்பிட்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளார்கள். (பின்னிணைப்பு ) அவை:

| | | |
|---|---|---|
| 1. மக்கள் பங்கேற்பு | - | அரசியல் சுதந்திரம் |
| | | அரசியல் ஸ்திரத்தன்மை |
| 2. அரசாங்கத்தின் ஒழுங்கமைப்பு | - | நீதிசேவையின் செயல்திறன் |
| | - | பணிக்குழு ஆட்சியின் செயற்திறன் |
| 3. சமூக அபிவிருத்தி | - | மானிட அபிவிருத்தி |
| | - | வருமான சமபகிர்வு |
| 4. பொருளாதார முகாமைத்துவம் | - | வெளிநாட்டு வருமானம் |
| | - | மத்திய வங்கியின் சுதந்திரம் |
| | - | GDPஇல் படுகடன் |

**விகிதாசாரம்**

மக்கள் பங்கேற்பு இரண்டு வகைப்படும். ஒன்று ஒரு நாட்டினுள் இருக்கும் அரசியல் சுதந்திரத்தின் அளவு மற்றயது ஒருநாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையின் அளவாகும். ஆட்சித்தன்மையில் மக்களால் செல்வாக்கு செலுத்தப்படும் திறமையைக் கொண்டு அரசியல் சுதந்திரம் மதிப்பிடப்படும். முதலீட்டாளர் ஒருவரின் மனதில் உருவாகும் தோற்றத்தை

அடிப்படையாகக் கொண்டு ஒரு வர்த்தகக் குழுவினால் உருவாக்கப்படுவதுதான் அரசியல் ஸ்திரத் தன்மையாகும். இத்தோற்றம் சில நாடுகளில் ஆட்சி தீர்மானங்களில் மக்கள் பங்கேற்கும் திறமை குறைவாக இருக்கக்கூடும் எனினும் அது ஒரு மக்கள் பங்கேற்பு தொடர்ச்சியை நியாயமான அளவு குறிப்பிட்டு காட்டுவதாக இருக்கும்.

## சமூக அபிவிருத்தியும் நல்லாட்சியும்

சமூக அபிவிருத்தி இரு தலைப்புகளின் கீழ் கருத்தில் கொள்ளப்படுகிறது. ஒன்று மானிட அபிவிருத்தி மற்றயது வருமான சமமின்மை ஆகும். தரப்படுத்தப்பட்ட நாடுகளின் மானிட அபிவிருத்தி சம்மந்தமான பெறுபேறுகள், ஐக்கிய நாடுகளின் மானிட அபிவிருத்தி சமபந்தமான சுட்டி மூலம் பெறப்படுகிறது. இச்சுட்டியினுள் வாழ்கை ஆயுட்காலம், முதியோர் கல்வியறிவு, கல்வியின் பங்கேற்பு, GDP இன் தலா வருமானத்தில் கொள்வனவு வலுச்சமனிலை என்பன உள்ளடங்கின்றன. ஒரு சமுதாயத்தின் சமத்துவத்தின் இயல்பு (வருமான சமமின்மை) கினி குணகம் மூலம் பெறப்படுகிறது.

பொதுவாக நாடுகளுக்கிடையிலான ஒப்பீடுகளை மேற்கொள்ள முனையும் போது கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது போல் சில குறிகாட்டிகளைக் கொண்டு கோடுகளை ஒப்பிடுவதன் மூலம் நல்லாட்சி நிலையினை நாடுகளுக்கிடையே அவதானிக்கவும் ஒப்பிடவும் முடியும்

### அட்டவணை 1, Governance Assessments: Selected Indicators, 2000

| Indicator | Togo | Argentina | India |
|---|---|---|---|
| Freedom of expression | 2.55 | 3.97 | 4.11 |
| Civil society input in policy making | 1.79 | 1.86 | 2.61 |
| Legislature representative of society | 1.67 | 2.17 | 2.83 |
| Legislators accountable to public | 1.83 | 2.20 | 2.56 |
| Military subordinated to civilian government | 1.75 | 4.23 | 4.67 |
| Civil servants accountable | 1.95 | 2.11 | 2.92 |
| Government's respect property rights | 2.67 | 2.74 | 3.21 |
| Regulations equally applied | 2.76 | 2.36 | 3.18 |
| Equal access to justice for all citizens | 2.19 | 2.43 | 2.86 |
| Judicial officers held accountable | 2.12 | 2.21 | 2.92 |

Source: World bank Annual Report -2003

## வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் உதவிகளும் நல்லாட்சியும்

ஒரு நாட்டிற்குள் வெளிநாட்டு முதலீடுகளையும் உதவிகளையும் கொண்டு வருகின்ற செயற்பாட்டின் போது நேரடியாக நடைபெறும் ஒரு விடயம் இலாபத்தினைப் பெற்றுக் கொள்ளுதலாகும். வெளிப்படையாக இந்த விடயம் வெளிநாட்டு உதவிகள் விடயத்தில் புலப்படாது விட்டாலும் இந்த உதவிகள் இறுதியில் ஒரு முதலீடாகவே தென்படுவதை அந்த உதவியின் பெறுபேற்றின் அடிப்படையில் வைத்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு நல்லாட்சி நிலவுவதற்கு காணப்பட வேண்டிய நிலைமைகள் எவை? அதற்காக அரசாங்கமும் முதலீட்டாளர்களும் கீழ்காணப்படும் விடயங்கள் தொடர்பான பொறுப்புக் கூறுதலை ஏற்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். அவ்வகையில்:

பிரஜைகளின் உரிமைகள் என்றவகையில் முதலீட்டினை மேற்கொள்ளும் போது அனைத்து பிரஜைகளினது அடிப்படைத் தேவைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன்

- மனித உரிமைகள் : (போதுமான உணவு, உடை, உறையுள் என்பன வழங்கப்படும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்)
- சமூகரீதியான உரிமைகள் : (சுகாதார வசதி, கல்வி, சமூக சேவைகள் என்பன உரியமுறையில் வழங்கப்பட வேண்டும்)
- தொழிலாளர் உரிமைகள் : (வேலைவாய்ப்பு, குறித்த சம்பளம், சங்கங்கள் அமுல்ப்படுத்தல், சுகாதாரமும் பாதுகாப்பும் வழங்கவும் ஏற்படுத்தவும் அனுமதி வழங்கப்பட வேண்டும்)
- சூழல் சார்ந்த உரிமைகள் : (காற்று, நீர், காடுகள், மீன்கள், விலங்குகள், மற்றும் ஏனைய விலங்குகளைப் பாதுகாத்தல் வேண்டும்)
- கலாச்சார ரீதியான உரிமைகள் : மக்களின் தனி (இன) அடையாளங்களைப் பாதுகாத்தல், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், மற்றும் மரபு உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்)

மேற்படி விடயங்களை மேற்கொள்வதில் அரசினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் பொறுப்புக்களை நோக்குவது பொருத்தமானதாகும் இவ்வகையில்:

அரசின் பொறுப்புக்கள் என்றவகையில் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேசிய பொருளாதாரத்தினை முதலில் பொருத்தமான வகையில் வடிவமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் நிதிபலம் தொடர்படல், ஆகிய கொள்கைகள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அதே போன்று அரச சேவையின் மூலமாக சூழல், சுகாதாரம் மற்றும் கலாச்சாரத்தினை பாதுகாத்துக் கொள்ளும் வேலைத்திட்டங்களும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

பல்தேசியக் கம்பனிகளது பொறுப்புக்கள் என்ற வகையில் தேசிய வளங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக அவர்கள் நட்டஈடு வழங்க வேண்டும். அதேவேளை தமது முதலீட்டுக்கான நியாயமான இலாபத்தினை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். பிரசைகளின் அடிப்படைத் தேவைகளுக்கு எந்தவித பாதிப்பினையும் ஏற்படுத்தாத ஒரு திட்டத்தினையே அவர்கள் பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்தினால் மக்களுக்காக செய்ய வேண்டிய

கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு என்பதனை இவர்கள் உணர்ந்து அதற்கமைய தமது நிபந்தனைகளை வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

## நாடொன்றின் ஜனநாயகமும் கிராமிய அமைப்புக்களும்

ஜனநாயகம் என்பது குறித்த ஒரு வகையான நடைமுறையாகும். அங்கு அரசியல் வேறுபாடு எதுவாக இருப்பினும் அனைவருக்கும் குறிப்பிட்டளவு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருத்தலும் அவ்வாறு வழங்கப்பட்டிருப்பதனை குறித்த நபர் அறியக் கூடிய நிலைமையும் அங்கு காணப்படும் என ஜேம்ஸ் ரஸல் லொவேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

“நான் ஒரு அடிமை அல்ல. அதே சமயம் நான் ஒரு எஜமானும் அல்ல” ஜனநாயகம் என்பதன் எனது கருத்து இதுவே என ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினரின் விடுதலைப் பண்பினை அடக்குவதற்கு பெரும்பான்மையானோர் தயாராக இருக்கும் நிலை என்றுதான் ஒரு ஜனநாயக சமூகத்தை விபரிக்கலாம் என்றார் வோல்டர் லிப்மன்.

ஜனநாயகத்தில் குறைந்தது ஒரு நல்ல பண்பு காணப்படுகின்றது அதாவது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்காளனைப் போல் அறிவற்றவர் அல்ல. ஏனெனில் பாராளுமன்ற உறுப்பினரிலும் பார்க்க வாக்காளன் அறிவற்றவனாகக் காணப்படுகின்றான். என்றார் பேர்டன் ரஸல்

ஜனநாயகம் என்பது அனைத்து மக்கள் சார்பிலும் அனைத்து மக்களுக்காக அனைத்து மக்களாலும் மேற்கொள்ளப்படும் சுயாட்சி முறையாகும் என்றார் தியேட்டர் பாக்கர்.

இவ்வாறாக ஜனநாயகம் என்றால் என்ன என்பது பற்றி பலரும் பல வியாக்கியானங்கள் குறிப்பிட்டுள்ள போதிலும் இன்று ஜனநாயகத்தின் விசேட அம்சமாகக் கருதப்படுவது பாராளுமன்ற ஆட்சி முறையாகும். ஆனாலும் ஒரு நல்லாட்சி நாட்டில் ஏற்பட வேண்டுமாயின், இன்று நிலவும் பாராளுமன்ற முறையில் சிலமாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எனவே இதனுடன் தொடர்புடைய சில பயனுறுதி வாய்ந்த காரணங்கள் கீழே தரப்படுகின்றன அவையாவன:

- நடைமுறையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் வாக்குகளின் மூலமே தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பது தெளிவானதொரு விடயம். அத்துடன் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களும் காணப்படுகின்றன.
- நியமனம் (பதவியில் அமர்த்தும்) வழிவகைகள் தொடர்பாக ஒரு தெளிவான சட்டதிட்டம் காணப்படுவதைப் போன்றே பதவியில் இருந்து அகற்றுவதற்கும் ஒரு தெளிவான வழிவகை காணப்படவேண்டும். குறித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அவர் தகுதியான ஒரு நபர் அல்ல என்று குறித்த

பிரதேசத்தினைச் சார்ந்த மக்கள் இனங்கண்டால் அவரைப் பதவியில் இருந்து அகற்றும் வழிவகைகள் காணப்பட வேண்டும்.

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பரவலாக்கப்பட்ட நிதியினை தனிப்பட்ட ரீதியில் குறித்த உறுப்பினர் கையாள்வதனைத் தடுக்கும் வழிவகைகள் காணப்படல் வேண்டும். நியமனம் வழங்குதல், இடமாற்றம் போன்ற நிறைவேற்று அதிகாரங்கள் காணப்படக்கூடாது.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டவாக்க நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடவேண்டும்.
- பாராளுமன்றத்திற்கு மேலதிகமாக இன்று அமுலில் உள்ளவற்றை விட வித்தியாசமான உள்ளூராட்சி முறைகள் அமுலாக்கப்பட வேண்டும். மாகாணசபை ஆட்சி முறையினை அகற்றிவிட்டு கிராம மட்டத்திலான ஆட்சி முறையினை உருவாக்குதல் வேண்டும்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு, ஓம்புட்ஸ்மன் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கிராம மட்டத்திலான ஆட்சியுடன் தொடர்புபட்டிருத்தல் வேண்டும்.
- கிராம மட்டத்திலான ஆட்சி அலகில் கிராம பாதுகாப்புச் சேவை ஒன்றும் உருவாக்கப்படுதல் வேண்டும். அத்தோடு கிராமத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்று ஒரு பேரவையும் உருவாக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு கிராமத்திலும் மனித உரிமைகள், பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை போன்றவற்றினைப் பாதுகாப்பதற்கான அமைப்பு முறைகள் காணப்படல் வேண்டும். அத்துடன் அங்கவீனர்களுக்கும் வறுமையில் வாடுபவர்களுக்கும் விசேட தேவையுடையவர்களுக்கும் நிவாரணம் வழங்கக் கூடிய அமைப்பு முறை ஒன்று காணப்படல் வேண்டும்.
- திடீர் ஆபத்துக்கள், வேலையின்மை போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு உதவி வழங்கக்கூடிய அமைப்பு ரீதியான ஒரு மறை கிராம மட்டத்தில் இருந்தே வளர்ச்சியடையச் செய்தல் வேண்டும்.

## நல்லாட்சி உருவாகுவதற்கான புறச் சூழல்

ஒரு நாட்டில் நல்லாட்சி உருவாகுவதற்கு தேவையான மூன்று பகுதிகள் என்றவகையில் பின்வருவன விளங்குகின்றன.

- அரசு : ஒரு நல்லாட்சிக்குத் தேவையான அரசியல் மற்றும் சட்டரீதியான ஒரு சூழலை உருவாக்கித் தரும்
- தனியார் துறை : இதன் மூலம் வேலைவாய்ப்பும் வருமானமும் உருவாக்கப்படும்.

❖ சிவில் சமூகம் : அரசியல் மற்றும் சமூகங்களுக்கிடையிலான செயற்பாட்டினை உருவாக்கும். அதனூடாக அரசியல், சமூக மற்றும் பொருளாதாரச் செயற்பாட்டிற்காக மக்கள் குழுக்களை ஆயத்தப்படுத்தும்.

இங்கு ஆக்கபூர்வமான ஒரு செயற்பாட்டினை ஏற்படுத்துவதன் ஊடாக நல்லாட்சிக்கான வழி உருவாக்கப்படும். ஒரு பிரிவினால் மேற்படி அனைத்து செயற்பாடுகளையும் செய்ய முடியாதென்பதாலேயே இவ்வாறு மூன்று பிரிவுகள் தேவைப்படுகின்றன. இவற்றுக்கியைிலான செயற்பாட்டின் மூலம் திறமைகளை ஒன்றிணைத்துக் கொள்ளவும் வெற்றி கொள்ள முடியாத விடயங்களை வெற்றி கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று சமத்துவமாக இயங்கும் பொழுது ஒரு முறையான நல்லாட்சிக்கான வழி உருவாகின்றது.

## ஒரு நாட்டில் நல்லாட்சி மூலம் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் என்ற வகையில்

❖ மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்டரீதியான ஆட்சி உருவாதல்
❖ அனைத்து விதமான ஆட்சி செயற்பாடுகளிலும் வெளிப்படையான தன்மை நிலவுதல்
❖ சமத்துவமும் நீதியும் வளர்ச்சியடைதல்
❖ சமூக நடவடிக்கைகளில் பங்கு பற்றல்
❖ வளங்கள் மற்றும் ஆட்சிக்கான நியாய தர்மங்கள் வளர்ச்சியடைதல்
❖ வளப் பயன்பாட்டின் போது செயற்திறன் வாய்ந்ததாகவும் பயன்தரக்கூடியதாகவும் அமைதல்
❖ ஆண் பெண் பால் நிலை சமத்துவமும், சமநிலையும் வளர்ச்சியடைதல்
❖ சமூக நடவடிக்கைகளுக்காக வளங்கள் பயன்படுத்தப்படுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுதல்
❖ திடமான அபிவிருத்தி காணப்படுதல்
❖ தேசிய ரீதியிலான நடவடிக்கைகளை உறுதி வாய்ந்ததாக மாற்றுதல்
❖ சட்டம் எல்லாவற்றுக்கும் மேலானதாகக் காணப்படும் (சட்ட ஏகாதிபத்தியம்)
❖ ஆட்சி செய்வதனை விட நிருவகிக்கப்படுவதற்கு பழக்கப்படுதல்
❖ பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்படுதல்
❖ தற்காலிக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஆற்றல்
❖ தனித்தன்மை வாய்ந்ததொரு சேவையினை செய்வதற்கு முன்னுரிமை வழங்குதல்

தேசிய ரீதியிலான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அர்ப்பணிப்பினையும் அவற்றினை விபரிப்பதற்கான ஆற்றலையும் பெறுதல். என்ற வகையில் பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

## நல்லாட்சித் தரத்தின் அடிப்படையில் நாடுகளை ஒப்பிடல்

ஆளுகைத் தரத்தின் சுட்டியின் (Governance Quality Index) அடிப்படையில் நாடுகளை சிறந்த ஆளுகை நாடுகள் (Good Governance Countries), நீதியான ஆளுகை நாடுகள் (Fair Governance Countries), மற்றும் குறைவான ஆளுகை நாடுகள் (Poor Governance Countries) என வகைப்படுத்தப்படுகின்றன. (மேலதிக விளக்கத்துக்கு பின்னிணைப்பு 2, 3 & 4) பின்னிணைப்பில் குறிபிடப்பட்டுள்ளது போல நாடுகளின் நல்லாட்சித்தரத்தினை

அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக Good Governance Countries இல் சுவிற்சலாந்து 75 என்ற உயர்ந்த நிலையில் உள்ளது. பிரித்தானியா 66 ஆகவும் அமெரிக்கா 70 ஆகவும் யப்பான் 63 ஆகவும் கனடா 71 ஆகவும் உள்ளமையும் Fair Governance Countries இல் இந்தியா 43 ஆகவும் இலங்கை 45 அகவும் காணப்பட Poor Governance Countries இல் சூடான் 20 அகவும் கானா 32 ஆகவும் உள்ளதை அவதானிக்கலாம். உலக நாடுகளில் நல்லாட்சியின் தரம் வேறுபட்டுள்ளது என்பதனை இக்குறிகாட்டியின் உதவியுடன் அறிய முடிவதுடன் அவற்றின் உண்மையான அபிவிருத்தியைக் கூட இதனைக் கருத்தில் கொண்டு மதிப்பிடப்படுவதே பயன்பாடுடையதெனலாம்.

## முடிவுரை

இறுதியாக தொகுத்து நோக்கும் போது நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி பற்றி நாம் கதைக்கும் போது, நாம் பொருளாதார மற்றும் சமூக அம்சங்களையும் கருத்திற் கொள்கின்றோம் என்பது வெளிப்படையாகும். இந்த அர்த்தத்தில் சமூக அபிவிருத்திச் சுட்டியின் (SDI) பெறுமானங்கள் மற்றும் பொருளாதார முகாமைத்துவச் சுட்டி (EMI) என்பன பொருளாதார அபிவிருத்தியை அளவீடு செய்வது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படுகின்றன. மறுபுறத்தில் நாட்டின் பிரசைகள் பங்குபற்றல் சுட்டி (CPI) மற்றும் அரச சார்புச் சுட்டி ஆகியவை நாடுகளிடையே சிறந்த ஆளுகையை (Good Governance) அளவிடுவதற்கும் நாடுகளை ஒப்பிடுவதற்கும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இங்கு மானிட அபிவிருத்திச் சுட்டி (HDI) மற்றும் மானிட சுதந்திரச் சுட்டி - 1 (HPI - 1) மற்றும் மானிட சுதந்திரச் சுட்டி - 2 (HPI - 2) என்பனவும் நாடுகளின் நல்லாட்சி அல்லது சிறந்த ஆளுகையை மதிப்பிடவும் ஒப்பிடவும் உதவுகின்றன. ஆகவே நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக சிறந்த ஆளுகை அல்லது நல்லாட்சி (Good governance) என்பது காணப்படுகின்றது.

## References:

Aristotle , politicsc, Book VII, Towett's translation, p:287.

Gupta, B.D., (1966), The Welfare State in India., Delhi, p:13.

© Overseas Development Institute 2006 ISSN 0140-8682GOVERNANCE, DEVELOPMENT AND AID EFFECTIVENESS: A QUICK GUIDE TO COMPLEX RELATIONSHIPS, www.odi.org.uk.

Good Governance Work Program: 2006-2008 Policy Coordination and Advice Programme Updated January 2007.

Jeff Huther and Anwar Shah, Applying a Simple Measure of Good Governance to the Debate on Fiscal Decentralization ,USAID seminar on Democracy and Governance

Good Governance http:/en. Wikipedia. org. good governance.

World bank Annual report 2003